# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 689/2025

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | ரவி |
| Father's Name | : | வெங்கடாசலம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.09.2025

**1,2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், கோதூர் ரோடு, திருவள்ளுவர் நகரில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். பரமேஸ்வரி எனது அக்கா ஆவார். கடந்த 30.03.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் ஞாயிற்றுக் கிழமை எனது அக்கா வீடான மருத்துவ நகரிலுள்ள அக்கா வீட்டிற்கு சென்றோம். எனது இளைய மகன் தனசீலன் மதியம் சுமார் 12.45 மணியளவில் கோதூர் ரோடு, திருவள்ளுவர் நகரிலுள்ள எனது வீட்டிற்கு சென்றபோது, வீடு கதவு உடைக்கப்பட்டும், வீட்டிற்குள் சென்று பீரோ உடைக்கப்பட்டிருந்ததாக எனது மகன் தனசீலன் சொன்ன தகவலை கேள்விபட்டு, நான் எனது குடும்பத்துடன் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த 22 பவுன் நகை காணாமல் போனது. 22 பவுன் நகை முறையே செயின் 3 3/4

பவுன், 2 வளையல், 3 பவுன் செயின் ஒன்று, 2 பவுன் மோதிரம் 2, குழந்தைகளின் மோதிரங்கள் 4 ஆக மொத்தம் 22 பவுன் ஆகும் மற்றும் பணம் ரூ.80,000/- ஆகியவை திருடு போயிருந்தது. இது சம்மந்தமாக கரூர் நகர காவல் நிலையத்தில் அன்றைய தினமே இரவு சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என்னை விசாரித்தனர். சுமார் 15 நாட்கள் கழித்து கரூர் நகர போலிசார் எதிரியை பிடித்துவிட்டதாகவும், காவல் நிலையம் சென்றேன். பின்னர், நகைகளை எதிரியிடமிருந்து 15 1/2 பவுன் நகைகளை கைப்பற்றியதாகவும், அதை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள நகைகள் எங்களுடையது. **அந்த போட்டோ அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 689/2025

| | | |
|---|---|---|
| | | Prosecution PW 2 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | மணிமேகலை |
| Husband's Name | : | ரவி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.09.2025

**1,2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், கோதூர் ரோடு, திருவள்ளுவர் நகரில் குடியிருந்து இல்லத்தரசியாக உள்ளேன். பரமேஸ்வரி எனது நாத்தனார் ஆவார். கடந்த 30.03.2025 ம் தேதி காலை 09.00 மணியளவில் ஞாயிற்றுக் கிழமை எனது நாத்தனார் வீடான மருத்துவ நகரிலுள்ள நாத்தனார் வீட்டிற்கு சென்றோம். எனது இளைய மகன் தனசீலன் மதியம் சுமார் 12.45 மணியளவில் கோதூர் ரோடு, திருவள்ளுவர் நகரிலுள்ள எனது வீட்டிற்கு சென்றபோது, வீடு கதவு உடைக்கப்பட்டும், வீட்டிற்குள் சென்று பீரோ உடைக்கப்பட்டிருந்ததாக எனது மகன் தனசீலன் சொன்ன தகவலை கேள்விபட்டு, நான் எனது குடும்பத்துடன் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டு பீரோவில் வைத்திருந்த 22 பவுன் நகை காணாமல் போனது. 22 பவுன் நகை முறையே செயின் 3 3/4 பவுன், 2 வளையல், 3 பவுன் செயின் ஒன்று, 2 பவுன் மோதிரம் 2, குழந்தைகளின் மோதிரங்கள் 4, காயின்ஸ் ஆக

மொத்தம் 22 பவுன் ஆகும் மற்றும் பணம் ரூ.80,000/- ஆகியவை திருடு போயிருந்தது. இது சம்மந்தமாக கரூர் நகர காவல் நிலையத்தில் அன்றைய தினமே இரவு சென்று எனது கணவர் அ.சா.1 புகார் கொடுத்தார். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து என்னை விசாரித்தனர். சுமார் 15 நாட்கள் கழித்து கரூர் நகர போலிசார் எதிரியை பிடித்துவிட்டதாகவும், காவல் நிலையத்திற்கு எனது கணவர் அ.சா.1 சென்றார். பின்னர், நகைகளை எதிரியிடமிருந்து 15 1/2 பவுன் நகைகளை கைப்பற்றியதாக என்னிடம் கூறினார். அதை என் கணவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டார் என்னிடம் காட்டப்படும் போட்டோவிலுள்ள நகைகள் எங்களுடையது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 689/2025

| | |
|---|---|
| | Prosecution PW 3 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | பெருமாள் |
| Husband's Name | : | சின்னமநாயக்கர் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 03.09.2025

**1,2 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

நான் கரூர், கே.ஏ. நகர், 2 வது தெருவில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். கடந்த 30.03.2025 ம் தேதி அ.சா.1 போன் மூலம் அவரது வீட்டில் நகை திருடு போய்விட்டதாக கேள்விபட்டு நேரம் சரியாக ஞாபகமில்லை. அவரது வீட்டிற்கு சென்று பார்த்தபோது, கதவு உடைக்கப்பட்டிருந்தது. போலிசார் சம்பவ இடத்தில் இருந்தனர். என்னிடம் 22 பவுன், ரூ.80,000/- பணம் திருடு போனதாக கூறினார். சம்பவத்தன்று அ.சா.1 தனது அக்கா வீட்டிற்கு சென்றிருந்ததாகவும் கூறினார். சமபவம் குறித்து போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

**குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் கால அவகாசம் கோரியதால் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி விசாரணை முடிக்கப்பட்டது.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR

**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**